**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF THE III ADDL.DIST & SESSIONS COURT (PCR), MADURAI.**
**Sessions Case No. 31/2019**
**Deposition of witness for PW**.103

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. மகாலட்சுமி | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 5th May 2021.

05.05.2021

முதல் விசாரணை

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2009 முதல் 2016 வரை நாமக்கல் மாவட்டம் சிபிசிஐடி பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 2015 ஆம் ஆண்டு நாமக்கல் சிபிசிஐடி குற்ற வழக்கு எண் 2/2015 வழக்கில் காவல் கூடுதல் கண்காணிப்பாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டுவந்தது. 14.10.2015 ஆம் தேதி விசாரணை அதிகாரி உத்தரவுப்படி எனக்கு கொடுத்த தபாலை பெற்றுக்கொண்டு திருச்செங்கோடு அர்த்தனாரீஸ்வரர் கோவில் மலை அடிவாரத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை அலுவலகத்திற்கு 14.10.2015 ஆம் தேதி சென்று மேற்படி தபாலை கொடுத்து குவிமுச 91 பிரிவின் கீழான தபாலின் அடிப்படையில் அன்றைய தினமே அவர்களது டெக்னீசியன் மூலம் கழட்டி என்னிடம் ஒப்படைக்கப்பட்ட கோவிலில் உள்ள சிசிடிவி சம்மந்தப்பட்ட DVR, Adapter, Mouse ஆகியவற்றை பெற்றுக்கொண்டு 15.10.2015 ஆம் தேதி புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன். மேற்படி DVR என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியிடப்பட்ட சாபொ 37 தான். மேற்படி Adapter என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியிடப்பட்ட சாபொ 38 தான். மேற்படி Mouse என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியிடப்பட்ட சாபொ 39 தான். என்னிடம் சார்வு செய்வதற்காக வழங்கப்பட்ட குவிமுச 91 பிரிவின் கீழான அழைப்பாணை சாபொ 37 முதல் 39 க்குரிய குறிப்புகளுடன் ஏற்கனவே குறியிடப்பட்ட என்னிடம் காட்டப்படும் அசாஆ 292 தான். அசாஆ 292 இல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 539 ஆகும்.

**1 முதல் 15 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

குற்றவியல் வழக்குகளில் புலன் விசாரணையின் போது சான்று பொருட்கள் எவ்வாறு கைப்பற்றப்படவேண்டும், என்ன தயார் செய்து கைப்பற்றப்படவேண்டும் போன்ற விவரங்கள் எனக்கு தெரியும். மேற்படி குவிமுச 91 பிரிவின் கீழான அழைப்பாணையை சார்வு செய்ய பணிக்கப்பட்டது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் இல்லை. பொதுவாக சிசிடிவியில் உள்ள

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

பதிவுகளை ஆய்வு செய்ய எங்கள் இலாகாவில் தனிபிரிவு உள்ளது என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபரிடம் இருந்து பொருட்கள் கைப்பற்றுவதற்கு அழைப்பாணை கொடுக்கப்படும் என்றால் சரிதான். அதுபோல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பி சான்று பொருட்களை எங்கள் அலுவலகத்தில் ஆஜர்படுத்தவும், பணிக்கப்படுவதும் வழக்கம்தான். மேற்படி சான்று பொருட்களை ஒப்படைக்கசொல்லி பிரிவு 61 குவிமுச படி அழைப்பாணை எதுவும் கொடுக்கப்படவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட சான்று பொருட்களை நான் கைப்பற்றவேண்டும் என்று எழுத்துப்பூர்வமான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்கப்படவேண்டும் என்று 3.5.2021 அன்று எனக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டபோதுதான் தெரியும். சிபிசிஐடி காவலர் ஒருவர் எனக்கு அழைப்பாணையை சார்வு செய்தார். எனக்கு 3.5.2021 அன்று அழைப்பாணை சார்வு செய்யும் வரை இந்த வழக்கில் எனது பங்களிப்பு சம்மந்தமாக என்னிடம் பிரிவு 161 (3) குவிமுச படி வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக புலன்விசாரணை அதிகாரி என்னிடம் விவரம் கேட்டார். என்னை புலன்விசாரணை அதிகாரி நாமக்கல் சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து விசாரித்தார், தேதி ஞாபகம் இல்லை. மேலே குறிப்பிடப்பட்ட சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டு எத்தனை நாட்களுக்குள் என்னை புலன் விசாரணை அதிகாரி விசாரித்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. பொதுவாக சான்று பொருட்கள் கைப்பற்றுதல் மகஜர் மூலம் காவல்துறையினரால் கைப்பற்றப்படும் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் எங்கு வைத்து, யாரிடம் இருந்து, யார் முன்னிலையில் யாரால் என்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டது போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அசாஆ 292 கவரில் வைத்து என்னிடம் கொடுத்தார்கள். அந்த கவர் ஒட்டப்படவில்லை. அதனால் அந்த கவருக்கு என்ன இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த கவருக்குள் அசாஆ 292 அழைப்பாணை மட்டும்தான் இருந்தது. அந்த கவரில் யாரிடம் கொடுக்கப்படவேண்டும் என்ற விவரம் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த கவர் உதவி ஆணையர், இந்து அறநிலையத்துறை, அர்த்தனாரீஸ்வரர் கோவில் என்பவருக்கு விலாசம் இடப்பட்டிருந்தது. நான் அந்த கவரை அவரிடம் நேரடியாக கொடுத்தேன் என்றால் அவர் அலுவலகத்தில் கொடுத்தேன். உதவி ஆணையர் அப்போது அலுவலகத்தில் இல்லாததால் அவரை நான் பார்க்கவில்லை. அவரது அலுவலகம் திருச்செங்கோட்டில் மலைஅடிவாரத்தில் உள்ளது. நான் தபாலை பெற்றுக்கொள்ளும்போது 14.10.2015 அன்று காலை 11 மணிக்கு பெற்றுக்கொண்டேன். தபாலை அலுவலகத்தில் கொடுக்கும்போது பகல் சுமார் 12 மணி இருக்கும். நாமக்கல்லில் இருந்து திருச்செங்கோடு சென்று கொடுத்தேன். நான் தபாலை கொடுத்த பின்னர் சுமாராக 3 மணிநேரம் கழித்து மேற்படி சான்று பொருட்கள் என்னிடம் கொடுக்கப்பட்டது. அந்த 3 மணிநேரமும் நான் மேற்படி அலுவலகத்தில்தான் இருந்தேன். அன்றைய தினம் நான் மலையில் உள்ள அர்த்தனாரீஸ்வரர் கோவிலுக்கு சென்றேன். அர்த்தனாரீஸ்வரர் கோவிலுக்கு சென்றபோது எத்தனை மணி இருக்கும் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அர்த்தனாரீஸ்வரர் கோவிலுக்கு சென்றபோது கோவில் உதவி ஆணையர் அங்கு வரவில்லை. சிசிடிவி தொடர்புடைய பொருட்கள் பற்றி எனக்கு தெரியும். மேலே

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

குறிப்பிடப்பட்ட சான்று பொருட்கள் அனைத்தும் மேலே மலையில் வைத்து கைப்பற்றப்பட்டது. மேற்படி சான்று பொருட்கள் கைப்பற்றுவது சம்மந்தமாக நான் மகஜர் எதுவும் தயார் செய்யவில்லை. மேற்படி பொருட்கள் கைப்பற்றுவதற்கு அசாஆ 292 இல் உள்ள குறிப்பு தவிர வேறு ஆவணம் எதுவும் நான் தயார் செய்யவில்லை. ஆனால் புலன் விசாரணை அதிகாரி தயார் செய்த படிவம் 91 அசாஆ 487 இல் நான் கையொப்பமிட்டுள்ளேன். நான் மேற்படி சான்று பொருட்களை சிபிசிஐடி ஏடிஎஸ்பி அலுவலகத்தில் ஒப்படைத்தேன். அவருக்கு அங்கு தனிப்பட்ட அலுவலகம் இல்லை, புலன் விசாரணைக்காக நாமக்கல்லில் அறை ஒதுக்கப்பட்டிருந்தது. அவரது அலுவலகம் கோயம்புத்தூரில் உள்ளது. சார்வு செய்யப்பட்ட பிரிவு 91 குவிமுச படியான அழைப்பாணையை நான் மீண்டும் அலுவலகத்தில் ஒப்படைத்தேன். அசாஆ 292 இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சி வழங்கினேன். அத்தாட்சி வழங்கியது சம்மந்தமாக அசாஆ 292 இல் குறிப்பு எதுவும் இல்லை. மேலே குறிப்பிடப்பட்ட சான்று பொருட்களை கழற்றி கொடுத்த டெக்னீசியன் பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன நாள், நேரத்தில், சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் இருந்து சாபொ 37 முதல் 39 கைப்பற்றப்படவில்லை என்றாலும், அது சம்மந்தமாக ஆவணங்களும் தயாரிக்கப்படவில்லை என்றாலும் , மேற்படி சான்று பொருட்கள் மற்றும் சான்று ஆவணங்கள் பின்னர் கோயம்புத்தூரில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சியம் வேண்டும் என்பதற்காக எங்கள் துறை அதிகாரிகளின் நிர்பந்ததின்பேரில் என்னை சாட்சியாக போட்டு எனக்கு சொல்லிதரப்பட்டதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF THE III ADDL.DIST & SESSIONS COURT (PCR), MADURAI.**
**Sessions Case No. 31/2019**
**Deposition of witness for PW.104**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ரவி | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 5th May 2021.

05.05.2021
முதல் விசாரணை

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் நல்லூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 27.6.2015 ஆம் தேதி நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகர காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். 27.6.2015 ஆம் தேதி திருச்செங்கோடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் திருமதி. சந்திரகலா என்பவர் என்னை அழைத்து ஈரோடு இருப்பு பாதை காவல்நிலைய குற்ற எண் 90/2015 u/s. 174 CrPC இன் படி இறந்து போன பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய திருச்செங்கோடு காவல் துணை கண்காணிப்பாளர் செல்வி. விஷ்ணுபிரியா அவர்கள் உத்தரவின்பேரில் கடவுசீட்டு பெற்று சேலம் அரசு மருத்துவமனை சென்று கோகுல்ராஜின் பிரேதத்தை துணை கண்காணிப்பாளர் செல்வி விஷ்ணுபிரியாவிடம் பிரேத விசாரணை செய்து முடித்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்துடன் என்னிடம் ஒப்படைத்தார்கள். அந்த வேண்டுகோள் கடிதம் என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியிடப்பட்ட அசாஆ 272 ஆகும். நான் 27.6.2015 ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு துணை கண்காணிப்பாளர் கையெழுத்திட்ட கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு சவக்கிடங்கிற்கு சென்று மருத்துவக்குழு சவக்கிடங்கிற்கு வந்து நான் கோகுல்ராஜின் பிரேதத்தை தலை தனியாகவும், உடல் தனியாகவும் இருந்ததை நான் அடையாளம் காட்டினேன். என்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடவுச்சீட்டு அசாஆ 540 ஆகும். 27.6.2015 ஆம் தேதி மதியம் 1.55 மணிக்கு டாக்டர். சம்பத்குமார் MD அவர்கள் சென்னை, டாக்டர் கோகுல்ரமணன் MD, பேராசிரியர் சேலம் அரசு மருத்துவமனை டாக்டர் திருமதி. சங்கீதா MD உதவி பேராசிரியர் சேலம் அரசு மருத்துவமனை மதியம் 1.55 மணிமுதல் மாலை 5.25 வரை பிரேத பரிசோதனை செய்து முடித்தார்கள். பிறகு பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்து சென்றார்கள். கோகுல்ராஜின் பிரேதத்தை அவரது உறவினர்கள் பெற மறுத்துவிட்டார்கள். எனவே துணை கண்காணிப்பாளர் திருச்செங்கோடு அவர்கள் மீண்டும் பிரேதத்தை பிரேத கிடங்கில் வைக்கக்கோரி கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று சடலத்தை மீண்டும் சவக்கிடங்கில் ஒப்படைத்தேன். கோகுல்ராஜின் பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட உடைமைகளை புளுகலர் ஜீன்ஸ்பேண்ட் கிழிந்த நிலையில் ஒன்று, புளுகலர் முழுக்கை சட்டை கிழிந்த நிலையில் ஒன்று, கிரே கலர் கருப்பு

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

பாடர் போட்ட முண்டா பனியன் கிழிந்த நிலையில் ஒன்று, பூமக்ஸ் என்ற எழுத்துள்ள பச்சை கலர் ஜட்டி ஒன்று ஆகியவற்றை கைப்பற்றி திருச்செங்கோடு காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்து நானும் , அவரும் சேர்ந்து திருச்செங்கோடு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் ஒப்படைத்தோம். 29.6.2015 ஆம் தேதி பிரேத்தில் இருந்து எடுக்கப்பட்ட எக்ஸ்ரே 13 எண்ணங்களை சவக்கிடங்கில் இருந்து பெறப்பட்டு சேலம் அரசு மருத்துவமனை ரேடியாலஜி பிரிவில் ஒப்படைத்தேன். அது சம்மந்தப்பட்ட கடவுச்சீட்டு அசாஆ 541 ஆகும். அன்றைய தினமே சீல் வைக்கப்பட்ட 4 விஸ்ரா பாட்டிகளை சேலம் அரசு மருத்துவமனையில் இருந்து பெற்று சேலம் மரவநேரியில் RFSL இல் ஒப்படைத்தேன். 30.6.2015 ஆம் தேதி துணை கண்காணிப்பாளரிடம் கடவுச்சீட்டு பெற்றும் அரசு மருத்துவமனை சேலம் டாக்டர் கோகுலரமணிடம் அறிக்கை செய்தும் அவர்கள் என்னிடம் ஒப்படைத்த சீல் வைக்கப்பட்ட 2 பாட்டிகளை பேத்தாலஜி பிரிவு சேலம் அரசு மருத்துவமனையில் அன்றே சீல் வைக்கப்பட்ட ஒரு கவர் மைக்ரோபயாலஜி பிரிவிலும் ஒப்படைத்தேன். அன்றே சீல் வைக்கப்பட்ட ஒரு கவரை மரவநேரி சேலம் RFSL இல் ஒப்படைத்தேன். அதற்குரிய கடவுச்சீட்டு அசாஆ 542 ஆகும். 1.7.2015 ஆம் தேதி துணை கண்காணிப்பாளர் திருச்செங்கோடு அவர்களிடம் கடவுச் சீட்டு பெற்று சேலம் அரசு மருத்துவமனை சென்று டாக்டர் கோகுலரமணிடம் அறிக்கை செய்தும் என்னிடம் கொடுக்கப்பட்ட Long cloth Parcel ஒன்றும், சீல் வைத்த பிளாஸ்டிக் பாட்டில் ஒன்றும் பெற்று 2.7.2015 ஆம் தேதி சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் DNA பிரிவில் ஒப்படைத்தேன். அதற்குரிய கடவுச்சீட்டு அசாஆ 543 ஆகும். 12.07.2015 ஆம் தேதி துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் கடவுச் சீட்டு பெற்றும் சேலம் அரசு மருத்துவமனை சென்று டாக்டர் கோகுலரமணனிடம் அறிக்கை செய்தும், அவருக்கு கொடுக்கப்பட்ட கோகுல்ராஜின் பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட Fly and few maggots சீல் வைக்கப்பட்ட 2 பாட்டிகளையும் பெற்று13.7.2015 ஆம் தேதி சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவகல்லூரி பேராசிரியரிடம் ஒப்படைத்தேன். அதற்குரிய கடவுச்சீட்டு அசாஆ 544 ஆகும். 29.7.2015 ஆம் தேதி திருச்செங்கோடு துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் கடவுச் சீட்டு பெற்று திருச்செங்கோடு கனம் JM அவர்கள் முன்பு ஆஜராகி அவர் கொடுத்த 7 சீல் வைக்கப்பட்ட கவர்களை பெற்று மரவநேரி சேலம் RFSL இல் ஒப்படைத்தேன். அதற்குரிய ரசீது, புகைப்பட நகல் அசாஆ 545 ஆகும் (எதிரிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியிடப்பட்டது). 31.08.2015 ஆம் தேதி திருச்செங்கோடு துணைகண்காணிப்பாளர் அவர்களிடம் கடவுச்சீட்டு பெற்று, திருச்செங்கோடு கனம் JM அவர்கள் முன்பு ஆஜராகி அவர்கள் கொடுத்த தபால் 2 சீல் வைத்த Cloth lined cover மற்றும் சீல் வைத்த பேப்பர் கவர் ஒன்றும் பெற்று 01.09.2015 ஆம் தேதி சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். அதற்குரிய கடவுச்சீட்டு அசாஆ 546 ஆகும். இது சம்மந்தமாக 4.10.2015 ஆம் தேதி சிபிசிஐடி கூடுதல் கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**1 முதல் 15 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடவுச்சீட்டு நான் எந்த காவல்நிலையத்தில் பணிபுரிகிறேனோ அங்கிருந்து வழங்கப்படுகிறது என்றால் சரிதான். பணி ஒதுக்கும் அதிகாரி என்ன பணி செய்ய வேண்டும் என்ற

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

விவரத்தை கடவுச்சீட்டில் குறிப்பிடுவார் என்றால் சரிதான். கடவுச்சீட்டை எந்த காவல்நிலைய குற்ற எண் சம்மந்தப்பட்ட பணி என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எந்த அதிகாரியிடம் நான் பணிக்காக சென்றேனோ அந்த அதிகாரியிடம் கடவுச்சீட்டில் ஒப்பம் பெறப்படவேண்டும் என்றால் சரிதான். எந்த பணிக்கு எங்கு சென்றேன், எத்தனை மணிக்கு சென்றேன், என்ன பணி செய்தேன், எத்தனை மணிக்கு நிலையம் திரும்பினேன் போன்ற விவரங்களை கடவுச்சீட்டில் எழுதி நிலைய பொறுப்பு அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். வெளிப்பணிக்காக செல்லும்போது அந்த காவல்நிலைய பொது நாட்குறிப்பில் கையொப்பம் இட்டு செல்லவேண்டும் என்றால் சரிதான். பின்னர் பணி முடித்து திரும்பி வந்தபின்னர் மீண்டும் பொது நாட்குறிப்பில் என்ன பணி செய்துவிட்டு, எப்போது நிலையம் திரும்பி வந்தேன் போன்ற விவரங்களை பொது நாட்குறிப்பில் எழுதவேண்டும் என்றால் சரிதான். பொதுவாக பணிபுரியும் காவல்நிலைய பணிகளுக்கும், அயல் காவல்நிலைய பணிகளுக்கும் அனுப்புவது வழக்கம் என்றால் சரிதான். பொதுவாக அயல்பணிக்கு போகும்போது கூடுதல் பொறுப்பு தந்தால்தான் செல்வோம், அதற்கு கடவுச்சீட்டு தருவதில்லை. பொதுவாக இருப்புபாதை காவல்நிலையங்களுக்கும், சட்ட ஒழுங்கு காவல்நிலையங்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். அசாஆ 540 இல் இருப்புபாதை காவல்நிலைய குற்ற எண் 90/2015 பிரிவு 174 குவிமுச வழக்கு சம்மந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் எங்கள் காவல்நிலையத்தை பற்றியோ, எங்கள் காவல்நிலைய குற்ற எண் பற்றியோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பணிமுடிந்து நான் நிலைய அதிகாரியிடம் ஒப்படைத்த கடவுச்சீட்டு தான் அசாஆ 540 என்றால் சரிதான். அசாஆ 540 இல் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு ஒப்படைக்கவேண்டும் என்பதை தவிர வேறு பணிகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அசாஆ 541 இல் குறிப்பிடப்பட்டுள்ள நுண்கதிர்படங்களை நான் டாக்டர் கோகுலரமணிடம் 29.6.2015 அன்று பெற்றுக்கொண்டேன். அதனை நுண்கதிர் படத்துறையில் ஒப்படைத்தேன். எக்ஸ்ரே டிபார்ட்மெண்டில் பெற்றுக்கொண்டதற்காக மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது. நுண்கதிர் படங்களை ஒரே கவரில் 13 படங்களை வைத்து பெற்றுக்கொண்டேன். 29.6.2015 ஆம் தேதி மதியம் 1 மணிக்கு எக்ஸ்ரே டிபார்ட்மெண்டில் ஒப்படைத்துள்ளேன். 29.6.2015 அன்று 4 விஸ்ரா பாட்டில்களை டாக்டர் கோகுலரமணனிடம் பெற்றுக்கொண்டு அன்றே RFSL சேலத்தில் ஒப்படைத்தேன். பாட்டில்கள் அட்டைபெட்டிக்குள் வைத்து சீல் வைக்கப்பட்டிருந்தது. அவை வெள்ளை நிற பாட்டில்களா கலர் பாட்டில்களா என்பதை அட்டைபெட்டி சீல் வைக்கப்பட்டிருந்ததால் நான் பார்க்கவில்லை. அசாஆ 542 ஐ 30.6.2015 அன்று பெற்றுள்ளேன். அதில் ஈரோடு இருப்புபாதை காவல்நிலைய குற்ற எண் 90/2015 பிரிவு 174 குவிமுச வழக்கை தவிர வேறு காவல்நிலைய குற்ற எண் வழக்கு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கடவுச்சீட்டு விஸ்ரா பெற்றுகொள்வதற்காகத்தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்ன பெற்றுக்கொண்டேன் என்று எழுதி 30.6.2015 ஆம் தேதி ஒப்பம் செய்திருக்கிறார் என்றால் சரிதான். அசாஆ 543 ஐ 1.7.2015 அன்று காலை 10 மணிக்கு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதில் ஈரோடு இருப்புபாதை காவல்நிலைய குற்ற எண் 90/2015 பிரிவு 174 குவிமுச வழக்கை

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

தவிர வேறு காவல்நிலைய குற்ற எண் வழக்கு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அது DNA test க்காக கொடுக்கப்பட்டது ஆகும். அதில் நான் யாரிடம் என்ன பெற்றேன் என்றோ, யாரிடம் என்ன கொண்டு ஒப்படைத்தேன் என்றோ அசாஆ 543 இல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 2 பாட்டில்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஒன்று பெரியபாட்டில் ஆகும். அசாஆ 542 இல் பின்புறத்தில் சேலம் அரசு மருத்துவமனையில் டாக்டர் கோகுல்ரமணனிடம் இருந்து சீல் வைத்த ஒரு கவர் பெற்றுக்கொண்டு மைக்ரோபயாலஜி டிபார்ட்மெண்டில் ஒப்படைத்தேன். அதில் டாக்டர் கோகுல்ரமணனிடம் இருந்து பெற்றதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். 30.6.2015 அன்று ஒப்படைத்தேன். அதில் 30 என்பதில் 3 திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசாஆ 544 இல் 12.7.2015 ஆம் தேதி காலை 8 மணிக்கு பெற்றுள்ளேன். அதில் ஈரோடு இருப்புபாதை காவல்நிலைய குற்ற எண் 90/2015 பிரிவு 174 குவிமுச வழக்கை தவிர வேறு காவல்நிலைய குற்ற எண் வழக்கு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதை நான் டாக்டர் கோகுலரமணனிடம் இருந்து பெற்றுக்கொண்டேன். சீல் வைத்த பாட்டிலாக பெற்றுக்கொண்டேன், அந்த பாட்டில் வெள்ளை நிற பாட்டில் ஆகும். அதனை சென்னை வேப்பேரி கால்நடை மருத்துவகல்லூரி பேராசிரியரிடம் ஒப்பபடைத்தேன், அதனை பெற்றுக்கொண்டதாக எழுதி 13.7.2015 ஆம் தேதி அவர் கையொப்பமிட்டுள்ளார். அசாஆ 544 ஐ நான் தான் மீண்டும் பணிமுடித்து காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். 14.7.2015 ஆம் தேதி வாசகங்கள் மைக்ரோபயாலஜி, எண்டோமலாஜி மேற்குறிப்பு எழுதியிருக்கிறார். சென்னையில் இருந்து மேற்படி மைக்ரோபயாலஜி சேலம் அவர்களிடம் நான் ஒப்படைத்தேன். அசா ஆ 545 புகைப்பட நகல் என்றால் சரிதான். அதற்குரிய கடவுச்சீட்டையும், அசல் ரசீதையும் துணை கண்காணிப்பாளர் விஷ்ணுபிரியா அவர்களிடம் ஒப்படைத்தேன். அசாஆ 546 ஐ 31.08.2015 அன்று பெற்றுள்ளேன். அது திருச்செங்கோடு நகர காவல்நிலைய குற்ற எண் 289/2015 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை தவிர வேறு காவல்நிலையமோ, வேறு குற்ற எண்ணோ எழுதப்படவில்லை என்றால் சரிதான். அதை வழங்கியவர் துணை கண்காணிப்பாளர் விஷ்ணுபிரியா. அதில் உள்ள கையொப்பம் அவருடையது. அதன்படி நீதிமன்றத்தில் இருந்து பெற்று தடய அறிவியல் துறையில் ஒப்படைத்தேன். அதில் என்ன பெற்றேன் , என்ன ஒப்படைத்தேன் என்பது பற்றி எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் பொருட்கள் பெறப்படவும் இல்லை, ஒப்படைக்கவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் பின்யோசனை செய்து தயார் செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை (அனுமதியுடன்)**

இருப்புபாதை காவல்நிலைய குற்ற எண் 90/2015, திருச்செங்கோடு காவல்நிலைய குற்ற எண் 289/2015 இரண்டுமே கோகுல்ராஜ் இறப்பு சம்மந்தப்பட்ட வழக்கு ஆகும்.

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF THE III ADDL.DIST & SESSIONS COURT (PCR), MADURAI.**
**Sessions Case No. 31/2019**

**<u>05.05.2021</u>**

**அசா 26 திரு. சீனிவாசன்**

சாட்சி ஆஜர்.

சாட்சி அரசு தரப்பில் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு

**<u>மறுவிசாரணை</u>**

நான் இந்த வழக்கு சம்மந்தமாக நான் காவல்துறையிடம் என்னுடைய செல்போன் சாபொ 41 ஐ மெமரிகார்டுடன் ஒப்படைத்தேன். அசா 2 கலைச்செல்வனும், அசா 4 சுவாதியும் பேசிகொண்ட உரையாடல் மேற்படி மெமரிகார்டில்தான் பதிவாகியிருந்தது.

**<u>எதிரிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை</u>**

செல்போன் மெமரிகார்டுடன் கூடியதை புலன்விசாரணை அதிகாரியிடம் எங்கு வைத்து ஒப்படைத்தேன் என்று ஞாபகம் இல்லை. அவற்றை ஒப்படைத்ததற்கு எனக்கு அத்தாட்சி வழங்கப்படவில்லை. செல்போனுடன் மெமரிகார்டை ஒப்படைத்தாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது செல்போனின் மாடல் எண் எனக்கு தெரியாது, அது பில்லில் உள்ளது. அந்த பில்லை ஒப்படைக்கவில்லை. அந்த பில்லை பார்த்தால் மாடல் எண் தெரியும் என்றால் சரிதான். மேற்படி செல்போன் என்னுடையதல்ல என்றால் சரியல்ல.

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com